# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## தொலைநிலைக்கல்வித் தேர்வுகள்

முனைவர் பி. பாலச்சந்திரன் நாள்: 10.11.2017

இணைத் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்

### சுற்றறிக்கை

### பொருள்: தொலைநிலைக் கல்வி - திசம்பர் 2017 தேர்வுகள்-தொடர்பாக.

2017ஆம் நாட்காட்டி ஆண்டிற்கான தொலைநிலைக்கல்வித் தேர்வுகள் மற்றும் துணைத்தேர்வுகள் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககம் வழியாக இளநிலை கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு **26.12.2017 முதல் 07.01.2018 வரை** நடைபெறவுள்ளன. தேர்வு எழுத விரும்புவோர் உரிய தேர்வுக் கட்டணத்தை செலுத்தி தேர்வுக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| ஆண்டு- திசம்பர் 2017 | இளநிலை பாடம் | விண்ணப்பக் கட்டணம் | தாள்1க்கு ரூ.200 வீதம் | செய்முறை-1 ரூ.250 வீதம் | ஆய்வேடு கட்டணம் | மதிப்பெண் கட்டணம் | தற்காலிகச் கட்டணம் | தொகுப்பு மதிப்பெண் பட்டியல் கட்டணம் | அஞ்சல் கட்டணம் | மையக் கட்டணம் | கூடுதல் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதலா மாண்டு | தமிழ், தமிழ் இலக்கியம், வரலாறு, வணிகவியல், வணிகமேலாண்மை, ஆங்கிலம்,கணிதம், உளவியல், தாவரவியல் | 100 | 1000 | - | - | 100 | - | - | 100 | 100 | 1400 |
| | தமிழிசை, புவியியல் | 100 | 800 | 250 | - | 100 | - | - | 100 | 100 | 1450 |
| | பி.சி.ஏ. | 100 | 1400 | 250 | - | 100 | - | - | 100 | 100 | 2050 |
| இரண்டா மாண்டு | தமிழ், தமிழ் இலக்கியம், வரலாறு,வணிகவியல், வணிகமேலாண்மை, ஆங்கிலம், கணிதம், உளவியல் | 100 | 1000 | - | - | 100 | - | - | 100 | 100 | 1400 |
| | தமிழிசை, புவியியல் | 100 | 800 | 250 | - | 100 | - | - | 100 | 100 | 1450 |
| | பி.சி.ஏ. | 100 | 1400 | 250 | - | 100 | - | - | 100 | 100 | 2050 |
| மூன்றா மாண்டு | தமிழ், தமிழ் இலக்கியம், வரலாறு, வணிகவியல், வணிகமேலாண்மை, ஆங்கிலம, கணிதம் | 100 | 1000 | - | - | 100 | 300 | 500 | 100 | 100 | 2200 |
| | உளவியல் | 100 | 800 | 250 | - | 100 | 300 | 500 | 100 | 100 | 2250 |
| | தமிழிசை | 100 | 400 | 750 | - | 100 | 300 | 500 | 100 | 100 | 2350 |
| | புவியியல் | 100 | 600 | 500 | - | 100 | 300 | 500 | 100 | 100 | 2300 |
| | பி.சி.ஏ. | 100 | 1000 | 500 | 300 | 100 | 300 | 500 | 100 | 100 | 3000 |
| ஒரு வருடம் | நூலகம் மற்றும் தகவலறிவியல் | 100 | 1200 | 500 | - | 100 | 300 | - | 100 | 100 | 2400 |

**பிற கட்டணங்கள்( மாணவர்கள் தேவைப்படும்போது விண்ணப்பிக்கவும்)**

| | |
|---|---|
| உண்மைத்தன்மைச் சான்றிதழ், பதிலிச்சான்றிதழ், சான்றிதழில் பெயர் திருத்தம் (ஒவ்வொன்றிற்கும்) | ரூ.1000 |
| பட்டப்பேற்று சான்றிதழ் (தொலைநிலைக்கல்வி- தட்கல் முறை) | ரூ.1500 |
| மறுமதிப்பீட்டுக் கட்டணம் (தாள் ஒன்றுக்கு) | ரூ. 500 |
| தமிழ் வழிச்சான்றிதழ் | ரூ. 100 |

இறுதி நாளுக்குப் பிறகு தாமதமாக விண்ணப்பிப்போர் 05.12.2017 வரை தாமதக் கட்டணம் ரூ. 100/-. அதன்பிறகு 12.12.2017 வரை தண்டக்கட்டணம் ரூ.500/- கூடுதலாகச் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

தேர்வுக் கட்டணத்தை **"பதிவாளர்,தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்". (THE REGISTRAR, TAMIL UNIVERSITY, THANJAVUR-10)** என்ற முகவரிக்கு ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வரைவோலை வழியாகவோ, BANK OF INDIA A/C எண் 814510110001726 - ல் செலுத்துசீட்டு வழியாகவோ, இணையதளம் வழியாகவோ செலுத்தலாம். (பணம் செலுத்திய இரசீதை கண்டிப்பாக இணைக்கவேண்டும்**) வரைவோலையின் பின்புறம் பெயர், பதிவுஎண், பாடம் ஆகியவற்றைக் கண்டிப்பாக குறிப்பிடவேண்டும்.** முழுமையாக பிழையின்றி நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **30.11.2017** மாலை 5 மணிக்குள் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்திறகுக் கிடைக்கப் பெறவேண்டும். தேர்வு விண்ணப்பத்தில் தங்கள் பெயரை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தெளிவாக குறிப்பிடவேண்டும்.

உரிய தேர்வுக் கட்டணமின்றிப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா. ஒரு முறை செலுத்திய தேர்வுக் கட்டணம் எந்தவொரு நிலையிலும் மீள வழங்கவோ அடுத்துவரும் தேர்வுக்கு ஈடு செய்யவோ இயலாது. கல்விக் கட்டண நிலுவை உள்ள மாணவர்கள், அதனை முழுவதும் செலுத்தி, உரிய பட்டியல் நகலினை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

ஒரு நாட்காட்டி ஆண்டிற்கான தேர்விற்கு முதன்முதலில் விண்ணப்பிக்கும்பொழுது, அவ்வாண்டின் அனைத்துப் பாடங்களுக்கும் உரிய கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

மாணவர்கள் கல்விக்கட்டணத்தை முழுமையாக செலுத்திய பின்னரே தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். செய்முறைத் தேர்வுக்கு விண்ணப்பிப்பவர் உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். மையங்களில் கல்விக்கட்டணம் செலுத்தியவர்கள் இக்கட்டணத் தொகை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டனவா என்பதைத் தாங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவிகள் எவருக்கேனும் தேர்வு எழுதுவதற்குத் தனியாள் (Scriber) தேவைப்படின் முன்கூட்டியே தனியாளின் (Scriber) தன்விவரக்குறிப்பு மற்றும் புகைப்படத்துடன் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலருக்கு விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும். இவர்களின் கல்வித்தகுதி +2 படிப்பிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

தேர்வு முடிவுகள் வெளியான 30 நாட்களுக்குள் மறு மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம். காலங்கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டா. தேர்வு முடிவுகள் வெளியிட்டபின் தேர்வு முடிவுகளை மாணவர்கள் இணையவழி www.tamiluniversity.ac.in, www.tamiluniversitydde.org மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம்.

**விண்ணப்பப் படிவத்துடன் +2 மதிப்பெண் / மாற்றுச் சான்றிதழின் நகல் இணைத்தனுப்ப வேண்டும்**